கட்டிடம் கட்டப்பட்டு, அந்தப் பள்ளி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அதனால்தான் மணலி உயர்நிலைப்பள்ளி என்கிற பழைய பெயரிலே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. குரும்பல் என்ற இடத்தை இடம் மாற்றம் செய்ய வேண்டும். ஆகவே, நான் சரியான இடத்தைத்தான் குறிப்பிட்டு இருக்கிறேன் என்று சொல்லி, அந்த உயர்நிலைப் பள்ளியையும், அந்த இடிந்த கட்டிடங்களையும் சரி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா, இந்த ஆண்டுக்குள்ளே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதுபோல, இது ஏதோ எல்லைத் தகராறு என்று கருதுகிறேன். இரண்டு கிராமங்கள் பக்கத்திலே இருக்கின்ற காரணத்தினால், எல்லையிலே இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பிரச்சினை எழுந்து இருக்கலாம். மீண்டும் அதைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்த விடுமுறையிலே அந்தப் பள்ளிக்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிவர்த்தி செய்து நடத்தி வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அளிக்கையை அளித்தல். திரு.எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை, 1993–94 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS